TERM 1

மாதிரி வினாத்தாள் 1 - T1

6th Standard

## அறிவியல்

Reg.No. :

I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

II.நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்

Time : 01:00:00 Hrs | Total Marks : 35

### பகுதி-அ
5 x 1 = 5

1) மருத்துவக் குணமிக்க தாவரங்களை நாம் எவ்வாறு அழைக்கிறோம்?

(a) பருப்புகள் (b) நறுமணச் செடிகள் (c) மூலிகைகள் (d) பட்டைகள்

2) எந்தத் தாவரத்தின் விதைப் பகுதி உணவாகப் பயன்படுகிறது?

(a) துவரை (b) பிரண்டை (c) வாழை (d) மஞ்சள்

3) உணவு தொடர்பான தொழிலைத் தேர்ந்தெடுக்க.

(a) கயிறு திரித்தல் (b) பூந்தோட்டத் தொழில் (c) பருத்தி வளர்த்தல் (d) ஊறுகாய் தயாரித்தல்

4) மஞ்சள் காமாலை நோய்க்கு மருந்தாகும் மூலிகைத் தாவரம்

(a) நெல்லி (b) வேம்பு (c) பிரண்டை (d) கீழாநெல்லி

5) காகிதம் தயாரிக்கப் பயன்படும் மரம்


(a) தேக்கு (b) யூகலிப்டஸ் (c) தென்னை (d) சந்தனம்

### பகுதி-ஆ
5 x 1 = 5

6)





7)




QUESTION BANK 365
https://www.qb365.in

8)




9) ஒரு மீட்டர் = ____________ சென்டிமீட்டர்

10) ஒரு கிலோமீட்டர் =____________ மீட்டர்

பகுதி-இ 5 x 1 = 5

11) தூதுவளை மஞ்சள் காமாலை நோய்க்கு மருந்தாகப் பயன்படுகிறது.

(a) True (b) False

12) இஞ்சி தாவரத்தின் வேர்ப்பகுதி ஆகும்.

(a) True (b) False

13) பிரண்டை ஒரு மூலிகைத் தாவரம்.

(a) True (b) False

14) கிராம்பு தாவரத்தின் விதைப்பகுதி ஆகும்.

(a) True (b) False

15) இலவ மரம் தீப்பெட்டி செய்யப் பயன்படுகிறது.

(a) True (b) False

பகுதி-ஈ 7 x 1 = 7

16) நம் நாட்டின் மருத்துவக் குணமிக்க தாவரங்களில் எவையேனும் ஐந்தினைப் பற்றி ஓர் அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிக்கு விளக்க வேண்டும். நீங்கள் எவ்வாறு விளக்குவீர்கள்?

17) மரங்களை வெட்டுவது கூடாது. ஆனால், நாம் பல்வேறு பயன்பாட்டுக்காக நாள்தோறும் மரங்களை வெட்டுகிறோம். இந்த முரண்பாடு குறித்துக் கலந்துரையாடித் தீர்வு காண்க.

18) மரச்சாமான்கள் செய்ய வன்கட்டை மட்டுமே பயன்படுத்த வேண்டும். இது சரியா? விடைக்கான காரணத்தைக் கூறுங்கள்.

19) கீழ்க்காணும் படத்தை உற்றுநோக்கவும்.




அ. இந்த இருவரில் யார் செய்வது சரி? ஏன்?

ஆ. கீழ்க்காணும் செயல்களில் நாம் எவற்றைச் செய்தால் நீண்ட நாள்கள் உடல் நலத்தோடு வாழலாம்?

20) இயற்கையான காய்கள், பழங்கள் போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளுதல்.

21) தினமும் காலையில் விழித்தல்.

22) இரவில் நீண்ட நேரம் தொலைக்காட்சி பார்த்தல்.

23) துரித உணவு (Fast Food) வகைகளை மிகுதியாகச் சாப்பிடுதல்.

24) கிரிக்கெட், நீச்சல், கால்பந்து போன்ற பல விளையாட்டுகளில் ஈடுபடுதல்.

25) மாலாவின் பல் ஈறு வீங்கி இரத்தம் கசியத் தொடங்கியது. பயந்துபோன மாலாவின் அம்மா மருத்துவரிடம் அழைத்துச் சென்றார். மருத்துவர் அந்த நோய்க்கான காரணமாக எதைக் கூறி இருப்பார்? மாலாவிற்கு மருத்துவர் பரிந்துரைத்த உணவுகள் என்னவாக இருக்கும்?

26) பழங்கள் மற்றும் காய்கறிகளை நறுக்கிய பின் கழுவ வேண்டுமா? நறுக்குவதற்கு முன் கழுவ வேண்டுமா? உங்கள் விடைக்கான காரணம் கூறுக.

27) மேசை மீது சில உணவு வகைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதைப் பார்த்த ஆர்த்தி அனைத்து ஊட்டச்சத்துகளும் நிறைந்த ஆரோக்கியமான உணவு வகைகளைத் தேர்ந்தெடுத்துச் சாப்பிட நினைக்கிறாள். நீங்களும் அவளுக்கு உதவி செய்யுங்கள்.



## பகுதி-உ

6 x 2 = 12

28) வாசனைத் திரவியங்கள் மற்றும் குளியல் சோப்புகளிலிருந்து மணம் வரக்காரணம் என்ன?

29) கயிறு, சாக்குப் பை போன்றவை செய்யப் பயன்படும் தாவரம் பற்றியும், தாவரப் பகுதி பற்றியும் எழுதுக.

30) மூலிகைகள் எங்கெல்லாம் வளர்கின்றன?

31) சமையல் எண்ணெய் தரும் தாவரங்களைக் குறிப்பிடுக.

32) நறுமணப் பொருள்களை உணவில் சேர்ப்பதால் ஏற்படும் நன்மைகளைக் கூறுக.

33) வன்கட்டை, மென்கட்டை வேறுபடுத்துக.

## பகுதி-ஊ

7 x 3 = 21

34) கீழே உள்ள சொற்களின் எழுத்துகள் இடம் மாறியுள்ளன. அவற்றை முறைப்படுத்தித் தாவரத்தின் பெயரைக் கண்டுபிடிக்க.

( எ.கா ) ஞ்சமள் - மஞ்சள்

1. வெ கா டை ண் ய் க் -___________

2. ல் நெ லி - _____________

3. சா ந் ம தி - ____________

4. ம் ஞ் ப் ர சு ழ ப ஆ - ____________

5. தூ கா ய ரி தி ந் -_________________

35) பின்வரும் கட்டங்களில் நமக்குப் பயன்தரக்கூடிய சில தாவரங்களின் பெயர்கள் ஒளிந்திருக்கின்றன. அவற்றில் குறைந்தது பத்துத் தாவரங்களைக் கண்டுபிடித்து, அவற்றின் பயன்களை எழுதுக.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | த | பெ | வ | பே | ஞ | ச | தோ | பொ | மே |
| மெ | பா | ல | ழ் | வா | ர் | ங் | னா | தே | லா |
| யா | க | ற் | றா | ழை | பி | தெ | பி | தி | ப் |
| ன் | ய் | ளொ | ளி | ப் | ர | கி | ரா | ம் | பு |
| ம | ல | ஓ | ழ் | பூ | ண் | டு | ளை | ய | ட |
| வ் | ஞா | ம | யி | அ | டை | டா | வ | கா | ல |
| கோ | ந் | வ | லோ | வ | அ | ள் | து | ங் | ங் |
| சே | வ | ல் | லா | ரை | ஔ | ர் | தூ | ரு | கா |
| ட் | வி | லி | ம் | ன | த | ந் | ச | பெ | ய் |
| ண் | பெ | த் | யா | தே | ங் | கா | ய் | பா | ன் |

36) உங்களுக்கு பிடித்த பொம்மைகளை உடைத்து விட்டீர்கள்.அதை உங்களால் சரி செய்ய முடியுமா?இதில் எவ்வகை மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன?

37) பள்ளியில் மீனாவும், நிஷாவும் மதிய உணவு சாப்பிட ஆரம்பித்தனர். ஆனால் நிஷாவின் உணவு கெட்டுப்போயிருந்ததால் அவளால் சாப்பிட இயலவில்லை. மீனா தனது உணவை நிஷாவுடன் பகிர்ந்து சாப்பிட்டாள். இந்நிகழ்வில் உணவு கெட்டுப்போதலை என்னென்ன மாற்றங்களின் கீழ் வகைப்படுத்தலாம்?

38) உங்கள் வீட்டு சமையல் அறையில் நடைபெறும் ஏதேனும் ஐந்து நிகழ்வுகளை எழுதி அவற்றில் எவ்வகை மாற்றங்கள் நிகழ்கின்றன என்பதை எழுதுக. எ.கா. சப்பாத்தி தயாரித்தல் - மெதுவான மாற்றம், விரும்பதக்க மாற்றம், மீளா மாற்றம் .

39) நீங்கள் பயன்படுத்தும் பென்சில் அழிப்பான் (rubber) நாளடைவில் அளவில் சிறியதாவது எதனால்? இதில் எவ்வகை மாற்றம் நிகழ்கிறது?

40) காகிதத்தை மடித்து கப்பல் செய்வது, காகிதத்தைத் துண்டுகளாக வெட்டி கப்பல் செய்வது இவற்றை மாற்றங்களின் அடிப்படையில் வேறுபடுத்துக.

*****************************************

QB365 QUESTION BANK 365 https://www.qb365.in